1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆவது பந்தியில் சொல்லப்படுகின்ற அதன் சட்டத்தின் 147 ஆவது பந்தியில் 1 ஆவது உப பந்தியில் (ஆ) பந்தியில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின படி, அக்மீமன பிரதேச சபை பிரதேசத்தில் இதன் உப அட்டவணையில் முதலாவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வியாபாரம் 2020 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்வதற்காக வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப்பத்திரம் அத்தொழிற்சாலையை நடாத்திச் செல்லும் வளவுக்கு வருடாந்த பெறுமதியில் 11 நிரலில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் எல்லைக்குள் உட்செல்லும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிரலில் குறிப்பிடப்பட்ட தொடர் தொகை படி அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்து அறவிடுவதற்கு அக்மீமன பிரதேச சபை தீர்மானித்துள்ளன.

அட்டவணை

	I ஆம் நிரல்	II ஆம் நிரல்		
தொ. இல.	வியாபார அனுமதிப்பத்திரத்தின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 750 இற்கு மேற்படாமல்	இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 750 இற்கு மேல் என்றாலும் ரூ. 1,500 இற்கு குறைந்த	இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 1,500 இற்கு மேல்
		ரூ. ச.	ரூ. ச.	ரூ. ச.
1.	இளைப்பாறும் இடம் ஒன்றினை நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
2.	ஹோட்டல் ஒன்று நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
3.	சோற்றுக்கடை, சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
4.	பேக்கரி ஒன்று நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
5.	பால் உற்பத்தி நிலையம் நடாத்தல் (பால் பண்ணை) வியாபாரம்	500 0	750 0	1,000 0
6.	மீன் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
7.	இறைச்சி வகை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லல்	250 0	500 0	750 0
8.	ஐஸ் தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
9.	குளிர்பான தொழிற்சாலை	500 0	750 0	1,000 0
10.	உள்நாட்டு வியாபாரம்	500 0	750 0	1,000 0
11.	லொண்டரி (சலவை சாலை)	500 0	750 0	1,000 0
12.	கால்நடை கொட்டகை	500 0	750 0	1,000 0

அட்டவணை

தொ. இல.	வியாபார அனுமதிப்பத்திரத்தின் தன்மை	I ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 750 இற்கு மேற்படாமல் ரூ. ச.	II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 750 இற்கு மேல் என்றாலும் ரூ. 1,500 இற்கு குறைந்த ரூ. ச.	II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதியில் ரூ. 1,500 இற்கு மேல் ரூ. ச.
13.	மாடு அறுக்கும் மடுவம்	500 0	750 0	1,000 0
14.	சிகை அலங்காரம் செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லல்	500 0	750 0	1,000 0
15.	தொழிற்சாலை	500 0	750 0	1,000 0
16.	மரண சடங்கு சேவை வழங்கும் நிலையம்	500 0	750 0	1,000 0
17.	கட்டிடப் பொருட்கள் சம்பந்தமான தொழிற்சாலை நிலையம் மற்றும் கட்டிடப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல்	500 0	750 0	1,000 0
18.	பலகை ஆலை நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
19.	கரேஜ்	500 0	750 0	1,000 0
20.	தேங்காய் எண்ணெய் ஆலை	500 0	750 0	1,000 0
21.	தும்பு ஆலை	500 0	750 0	1,000 0
22.	தச்சுப் பட்டறை நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
23.	நெல் ஆலை	500 0	750 0	1,000 0
24.	யோகட் தயாரித்தல்	500 0	750 0	1,000 0
25.	கோழிப் பண்ணை	500 0	750 0	1,000 0
26.	ஐஸ்கிறீம் தயாரித்தல்	500 0	750 0	1,000 0
27.	இனிப்புப் பண்டம் தயாரித்தல்	500 0	750 0	1,000 0
28.	வாகனம் சுத்திகரிப்பு செய்தல்	500 0	750 0	1,000 0
29.	பல் உணவு தயாரிக்கும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
30.	மிருகப் பண்ணை நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
31.	விவசாய இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்தல் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
32.	எஸிட் வகை தயாரித்தல், வியாபாரம் செய்தல்	500 0	750 0	1,000 0
33.	பைபர், கிளாஸ், தயாரித்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
34.	சிப்பி ஓடு அரைக்கும் ஆலை மற்றும் இரசாயன பொருட்கள் தயாரிக்கும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
35.	பெட்ரி சார்ஜ் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
36.	இயந்திர தச்சு வேலைத்தளம் நடாத்திச் செல்லுதல்	500 0	750 0	1,000 0
37.	பொது வியாபாரத் தளம்	500 0	750 0	1,000 0

கவனிக்க வேண்டியவை :

ஏதேனும் இடத்தில் ஹோட்டல் அல்லது உணவகம் மற்றும் விடுதி செயல்களுக்காக பாவிக்கப்படும் போது 1968 ஆம் ஆண்டின் இலக்கம் 14 உடைய உல்லாச அபிவிருத்தி சட்டத்தின் செயல்களுக்காக அந்த ஹோட்டல் அல்லது உணவகம் மற்றும் விடுதி இலங்கை உல்லாச சபையில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் ஹோட்டல் அல்லது உணவகம் மற்றும் விடுதிகளில் சென்ற ஆண்டின் வருவாயில் 1% அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்த வேண்டியும்

அக்மீமன பிரதேச சபை

வியாபாரக் கட்டணம் அறவிடல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.5 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆவது பந்தியில்

(அ) (1) ஆவது உப பந்தியில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, அக்மீமன பிரதேச சபை பிரதேசத்தில் இதன் உப அட்டவணையில் முதலாவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வியாபாரம் 2020 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் எல்லோருக்கும் அதன் வியாபாரத்தில் 2019 ஆம் ஆண்டின் வருவாயில் இரண்டாவது பகுதியில் (1) ஆவது நிரலில் குறிப்பிட்ட ஏதேனும் எல்லைக்குள் நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் (2) ஆவது நிரலில் தெளிவாக்கப்பட்ட குறிப்பில் குறிப்பிட்ட தொடர் தொகை படி வரி விதித்து அறவிடுவதற்கு மற்றும்

(ஆ) (3) ஆவது உப பந்தியில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, வரிக்கு கீழ்படிவுள்ள சகல நபர்களால் குறிப்பிட்ட வரி 2020, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்று கட்டளையிடுவதற்கு அக்மீமன பிரதேச சபை தீர்மானித்துள்ளன.

1. சில்லறை வியாபாரம் ஒன்று நடாத்திச் செல்லல்
2. புடவை வகைகள் தைத்த உடைகள் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
3. சாப்பு பொருட்கள்விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
4. பாதணி விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
5. தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
6. இரசாயன கூடம் ஒன்று நடாத்திச் செல்லல்
7. கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
8. தீந்தை விநியோகிக்கும் வியாபார நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
9. தனியார் கல்வித் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
10. பாலகர் பள்ளி/பகலில் குழந்தை பராமரிப்பு நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
11. கணினி பயிற்சி பாடநெறி தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
12. கணினி தொகுதிகள் அபிவிருத்தி நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
13. சாரதி பயிற்சி அளிக்கும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
14. கூட்டுறவு சங்கம் சில்லறைக் கடை (பிரதேச) நடாத்துதல்
15. மேற்கத்திய வைத்திய நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
16. ஆயுர்வேத வைத்திய நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
17. நிதித் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
18. காப்புறுதி சேவைஅளிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
19. லீஸிங் சேவை அளிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
20. தனியார் மருத்துவமனை ஒன்று நடாத்திச் செல்லல்
21. தங்கங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
22. கணினி துணைக்கருவி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்

23. தளபாடம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
24. விளம்பரப்படுத்தும் செயல்களில் ஈடுபடும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
25. விழாக்களுக்கான பொருட்களை வாடகைக்கு கொடுக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
26. மூக்குக்கண்ணாடி சாப்பு ஒன்று நடாத்திச் செல்லல்
27. லொத்தர் முகவர் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
28. பீங்கான், மட்பாண்டம் தொடர்புள்ள தயாரிப்பு விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
29. குதிரைப் பந்தாட்ட நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
30. படம் சட்டமிடுதல் அல்லது கிளாஸ் வெட்டும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
31. நெல் கொள்வனவு செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
32. தொலைதொர்பு சேவை அளிக்கும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
33. நடமாடும் தொலைபேசி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
34. தொழில் முகவர் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
35. வீடியோ படி, சங்யுத்த தடி (குறுவட்டு) விற்பனை அல்லது வாடகைக்கு அளிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
36. காகிதாதிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
37. தளபாடம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
38. பத்திரிகை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
39. இசைக்கருவி, விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
40. களஞ்சியமாக வாடகைக்கு கொடுக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
41. மின் உபகரணம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
42. தொகையாக பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
43. சீமெந்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
44. பிரசித்தமான சங்கத்தின் பொருட்கள் பகிர்ந்தளிக்கும் முகவர் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
45. வாகனம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
46. மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
47. வெற்றிலை, பாக்கு விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
48. சொகுசு சந்தை நடாத்திச் செல்லல்.
49. விலங்குகளின் உணவு விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
50. புகையிலை தொடர்புடைய தயாரிப்பு விற்பனை செய்யும் முகவர் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
51. பாவிக்கப்பட்ட வாகனம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
52. மருத்துவர்கள் மற்றும் நோயாளிகள் சந்திக்க வைக்கும் தாபனம் (சனல் செண்டர்) நடாத்திச் செல்லல்
53. பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
54. மின் பொருட்கள் பழுதுபார்த்தல் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
55. தேயிலை கொழுந்து சேகரிப்பு நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
56. வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
57. மதுசாரம், பியர் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
58. மேற்சத்திய மருந்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
59. சிதைவுப் பொருட்கள் சேகரிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
60. வாகனத்தின் புகை பரிசோதனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
61. எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
62. நடமாடும் வியாபாரம் வாகனம் அல்லது நடமாடும் வியாபார நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
63. தேயிலை தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லல்
64. கேஸ் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
65. பழைய உலோக பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
66. மரக்கறி, பழங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
67. மொத்தமாக பொருட்கள் களஞ்சியப்படுத்தி விற்பனை (கல், மண், செங்கல், சீமெந்து, பசளை)
68. கொஸரிஸ் ஒன்று நடாத்திச் செல்லல்
69. வீடியோ, ரெகோட் பார் ஒன்று நடாத்திச் செல்லல்
70. புத்தகங்கள், காகிதாதிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
71. ஒலிபரப்பு இயந்திரம் வாடகைக்கு கொடுக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்

72. பீங்கான் பொருட்கள்/பிளாஸ்டிக் பொருட்கள் அலுமினியம் பொருட்கள் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
73. ஆங்கில மருந்து வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்.
74. ஆயுர்வேத மருந்து வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
75. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விநியோகிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
76. வெற்றிலை, பாக்கு, சுருட்டு, புகையிலை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
77. கூட்டுறவு சில்லறை வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
78. கூட்டுறவு மொத்த வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
79. கட்டிடப் பொருட்கள் விற்பனை/களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
80. மொத்தமாக குளிர்பானம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
81. பினென்ஸ் சங்கம் ஒன்று நடாத்திச் செல்லல்
82. வளர்ப்பு மீன் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
83. வெளிநாட்டுத் தொழில் முகவர் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
84. வெளிநாட்டு குடி வகை சாப்பு ஒன்று நடாத்திச் செல்லல்
85. முட்டை விநியோகிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
86. உப ஒப்பந்த வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
87. வங்கி ஒன்று நடாத்திச் செல்லல்
88. பலகையால் அலங்கார தயாரிப்பு நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
89. பாதுகாப்பு சேவை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
90. போக்குவரத்து சேவை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
91. தொலைத் தொடர்பு வேலை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
92. பதிவு செய்யப்பட்ட வாகனம் வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
93. மண்வெட்டும் இயந்திரம் வாடகைக்கு கொடுக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
94. தீந்தை வகை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
95. மட்பொருட்கள் விநியோகிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
96. மலர்கள் வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
97. பழைய உலோகப் பொருட்கள் சேகரிக்கும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
98. பீங்கான் மட்பொருட்கள் (செரமிக் வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
99. நடமாடும் தொலைபேசி விற்பனை
100. மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
101. மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
102. மோட்டார் வாகனம் விற்பனைக்காக கணினி மற்றும் கணினி பகுதி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
103. சாரதி பயிற்சி தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
104. காப்புறுதி முகவர் வியாபாரத்திற்காக
105. வாடகை வாகன உரிமையாளர்
106. தனியார் போக்குவரத்து உரிமையாளர்
107. கல்வித் தாபனத்திற்காக
108. ஒப்பந்தக்காரரின் வியாபாரத்திற்காக
109. கொமிஸ் முகவராக வியாபாரம் ஒன்று நடாத்திச் செல்லல்
110. அனைத்தும் வங்கி
111. லொத்தர் முகவர்களாக
112. தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று நடாத்திச் செல்லல்
113. மதுசார சாலை ஒன்று நடாத்திச் செல்லல்
114. மிதி வண்டி, வானொலி உபகரணம், தொலைக்காட்சி இயந்திர, குளிரூட்டி பெட்டி மற்றும் மின் உபகரணம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
115. பிரசித்தமான சேவை விநியோகிக்கும் முகவர் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
116. தையல் இயந்திரம் இயந்திர உதிரிப்பாகங்கள், கேஸ் அடுப்பு மற்றும் மின் உபகரணத் தொகுதிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்

117. உபயோகிக்கப்பட்ட பொருட்கள் உபகரணங்கள் மின் உபகரணம், மின் உபகரணம் ஆகியவை விற்பனை கொள்வனவு செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
118. தொகையாகப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
119. தனியார் கல்வித் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
120. தைத்த ஆடை/புடவைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
121. புடவை/சாப்புப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
122. மின் உபகரணம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
123. அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட மதுசாரம் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
124. லொத்தர் விநியோகிக்கும் முகவர் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
125.
126. சாரதி பயிற்சித் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
127. நிதித் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்
128. லீஸிங் சேவை அளிக்கும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல்
129. குதிரை பந்தாட்டம் நடாத்திச் செல்லல்
130. தொழில் முகவர் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லல்

நிரல் I	நிரல் II
2018 ஆம் ஆண்டின் வியாபாரத்தின் வருவாய்	செலுத்த வேண்டிய வரி ரூபா சதம்
1. ரூபா 6,000 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	இல்லை
2. ரூபா 6,000 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 12,000 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 90.00
3. ரூபா 12,000 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 18,750 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 180.00
4. ரூபா 18,750 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 75,000 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 360.00
5. ரூபா 75,000 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 100,000 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 750.00
6. ரூபா 100,000 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 1,50,000 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 1200.00
7. ரூபா 1,50,000 க்கு மேற்படும் என்றாலும் ரூபா 2,00,000 வுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	ரூபா 2000.00
08. ரூபா 2,00,000 இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில்	ரூபா 3000.00

12-540/5

அக்மீமன பிரதேச சபை

விளம்பர அறிவித்தலுக்காக கட்டணம் அறவிடல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.6 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 122 (1) ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற அதன் சட்டத்தின் 69 ஆவது மற்றும் 126 ஆவது பந்தியில் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற அதிகாரங்களின் படி 1988.08.23 ஆந் திகதிய இலக்கம் 520/7 அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களால் தயாரித்து பிரசுரிக்கப்பட்ட 01-42 வரையான துணை விதி அக்மீமன பிரதேச சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 1991.03.22 ஆந் திகதிய இலக்கம் 655 உடைய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி 39 விளம்பர அறிவித்தல்/ கட்புலனாகும் சூழல் தொடர்புற்ற துணை விதி முறைகளின் படி அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதேனும் முறையில் வீதிக்கு, வாவி, அருவி மற்றும் ஆகாயத்துக்கு காட்டும் வகையில் (பெனர் உட்பட) கட்டுமானம் மற்றும் பார்வைக்கு விடுதல் அதற்கு பின்வரும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணம் விதித்து அறவிட வேண்டும் என்று அக்மீமன பிரதேச சபை தீர்மானம் செய்யப்பட்டன.

அட்டவணை

அறிவிப்பு வகை	ஒரு மாதத்திற்கு அல்லது மாதத்திற்கு குறைந்த விளம்பர செயலுக்கான கட்டணம் ரூபா. சதம்	ஒரு மாதத்திற்கு மேல் கட்டணம் ரூபா. சதம்
1. சுவர் ஒன்றில் அல்லது வடிவப் பலகையொன்றில் காட்சிப்படுத்துவதற்காக ஏதாவதொரு இடத்தில் பொருத்தும் போது ஒரு சதுர அடிக்கு	50.00	150.00

12-540/6

அக்மீமன பிரதேச சபை

வாரச் சந்தை கட்டணம் அறவிடுதல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.7 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் உடைய பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 119 ஆம் பிரிவின் படி பின்வருமாறு அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாரச் சந்தைகளினால் 2020 ஆம் ஆண்டுக்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணம் அறவிட உகந்தது என்று தீர்மானம் செய்யப்பட்டன.

அட்டவணை

	ரூ. ச.
1. சதுர அடி 01 இலிருந்து 05 வரை	30.00
2. சதுர அடி 06 இலிருந்து 10 வரை	40.00

		ரூ. ச.
3.	சதுர அடி 11 இலிருந்து 15 வரை	50.00
4.	சதுர அடி 16 இலிருந்து 25 வரை (அதற்கு மேற்படும் எல்லா இடத்திற்கு சதுர அடி ரூ. 5.00 படி)	60.00
5.	நாளாந்தம் ஐஸ்கிறீம் வியாபார அறிவிப்பு விளம்பர விற்பனைப் பிரதிநிதி வாகனங்கள்	50.00
6.	மொபைல் போன் விளம்பரங்களின் விளம்பரங்கள் விற்பனைப் பிரதிநிதி விழா காலங்களில் வாகனங்கள் (சந்தை பூமிக்குள் அல்லது வெளியே யாதேனும் இடத்தில்)	1600.00 1600.00
7.	நடமாடும் இனிப்பு பண்டம் வியாபாரத்திற்காக	40.00
8.	உல்லாச வியாபாரத்திற்கு (தொகையாக அல்லது சில்லறை)	150.00
9.	துணி விற்பனையாளர்கள் பயணம் வேன்கள் மற்றும் அலுமினியப் பொருட்கள் பீங்கான் பொருட்கள் அல்லது பிளாஸ்டிக் பொருட்கள் ஜவுளி பொருட்கள் மொத்தமாக அல்லது சில்லறை விற்பனையாளர்களுக்காக	100.00
10.	சந்தை நிலத்தில் கட்டப்பட்ட வியாபார கூடாரத்திற்காக 1 கட்டடம் 2 கட்டடம்	 150.00 100.00
11.	சகல தற்காலிக கடை அறைக்கான (சதுர அடி 20 அளவுடைய)	150.00

கவனிக்க வேண்டியது :
(இந்த எல்லா கட்டணமும் அபிவிருத்தி செயல்களுக்காக மற்றும் பிரதேச சபை தேவைக்கேற்ப திருத்தப்பட வேண்டும்.)

12-540/7

அக்மீமன பிரதேச சபை

சூழல் உத்தரவு சீட்டு கட்டணம் அறவிடுதல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.8 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானம்

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தச் சட்டத்தின் 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க சுற்றுச் சூழல் சட்டம் 23 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் சுற்றுச்சூழல் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அக்மீமன பிரதேச சபை அதிகார

எல்லைக்குள் ஆரம்பித்து நடாத்திச் செல்லும் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வியாபாரம் மற்றும் தொழிற்சாலை சம்பந்தமான இலக்கம் 1533/16 மற்றும் 2018.01.25 ஆந் திகதி அல்லது 1534/18 ஐ உடைய 2008.02.01 ஆந் திகதி திருத்தப்பட்ட வர்த்தமான அறிவிப்பில் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பொருத்தமாக அதன் வணிக/தொழிற்துறை நடாத்திச் செல்லும் நபரால் உரிய ஆண்டிலிருந்து நடைமுறைப்படி முன்னுக்கு குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கு உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்திற்காக 4000.00 ரூபா அனுமதிப்பத்திர கட்டணம் விதித்து அறவிட வேண்டும் என்று அக்மீமன பிரதேச சபை தீர்மானம் செய்யப்பட்டன.

அட்டவணை I

1. எல்லா வாகனம் எரிபொருள் நிலையம் (திரவப் பெற்றோலியம் மற்றும் பெற்றோலியம் எரி வாயு)
2. தொழிலாளர் 10 உம் அதற்கு மேல் எண்ணிக்கை சேவையில் ஈடுபடுத்தும் மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிற்சாலை
3. 10க்கு மேற்பட்ட 25 இற்கு குறைந்த தொழிலாளர்களை கொண்டு இயங்கும் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை
4. 10க்கு மேற்பட்ட 25 இற்கு குறைந்த தொழிலாளர்களை கொண்டு இயங்கும் மதுசாரம் அடங்காத குடிவகை தயாரிக்கும் தொழிற்சாலை
5. நெல் உலர்த்தும் தொழிற்பாடு கொண்ட ஆலை
6. மாதாந்தம் தயாரிக்கும் கொள்திறன் கிலோ கிராம் 1000 க்கு குறைந்த அரைக்கும் ஆலை
7. புகையிலை காய்க்கும் தொழிற்சாலை
8. சல்பர் புகை அடித்தல் உட்பட்ட இதன் செயற்பாடு தயாரிப்பு கொள்திறன் கிலோ கிராம் 500 உம் அதற்கு மேல் கொள்திறன் கொண்ட கறுவா புகை அடித்தல் தொழிற்சாலை
9. உணவுக்கு எடுக்கும் உப்பு பெகட் தயாரிக்கும் தொழிற்சாலை
10. திடீர் தேயிலை தொழிற்சாலை உட்பட வேறு தேயிலை தொழிற்சாலை
11. கொங்கிறீட் கலவை தொழிற்சாலை
12. இயந்திர உதவியுடன் சீமெந்து புலொக்கல் தயாரிக்கும் தொழிற்சாலை
13. நாளொன்றுக்கு மெட்ரிக் தொன் 20 இற்கு மேற்படாத திறன் கொண்ட சுண்ணாம்பு சூளை
14. பிளாஸ்டிக் ஒப் பெரிஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அல்லது 25 இற்குக் குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் பிங்கான், களி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை
15. எல்லா சிப்பி அரைக்கும் தொழிற்சாலை
16. ஓடும் செங்கல்லும் தயாரிக்கும் தொழிற்சாலை
17. ஒரு முறைக்கு ஒரு வெடி மருந்து குழி வீதம் வெடிக்க வைக்கும் மாதமொன்றுக்கு 600 கன மீற்றர் உற்பத்தி
18. நாளொன்றுக்கு கன மீற்றர் 50 இற்கு குறைந்த திறனையுடைய மரங்கிழிக்கும் நிலையம் நடாத்துதல்
19. நிறைய தொழிற்பாடு இயந்திரங்கள் உபயோகிக்கும் தச்சு தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் 05 க்கு மேல் 25க்கு குறைந்த கணக்கு தொழில் செய்யும் மரங்கள் சம்பந்தமான தொழிற்சாலை
20. 5 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் ஹோட்டல்கள் மற்றும் உணவுச்சாலைகள்
21. வாகன குளிரூட்டிகள் பழுதுபார்த்தல், பராமரித்தல், பொருத்துதல் உள்ளிட்ட வாகனங்கள் பழுதுபார்ப்பு நிலையம் அல்லது பராமரிப்பு நிலையம்
22. குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டி வாயு இயந்திரம் பழுதுபார்த்தல் பராமரித்தல் பொருத்துதல் செய்யும் நிலையம்
23. வாகன சேவை செயல் நிறைவேற்றப்படாத கண்டனர் முடிவு முனை
24. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் எல்லா மின்சாரம் அல்லது மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல் நிலையம்
25. ஈயம் வெப்பமேற்றுவது உட்படாத அச்சகம் அல்லது எழுத்து அச்சடிக்கும் இயந்திரம்

அக்மீமன பிரதேச சபை

வியாபார தளங்களின் கட்டண வரி அறவிடுதல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.9 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானம்

விழா சந்தர்ப்பங்களில் தற்காலிக வியாபார நிலையத்துக்கு 2020 ஆம் ஆண்டுக்காக அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஒரு தினத்திற்கு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு வரித் தொகை எல்லா நாட்களுக்கும் அறவிடுவது உகந்தது எனத் தீர்மானம் செய்யப்பட்டது

அட்டவணை

		ரூபா ச.
01.	சதுர அடி 01 இருந்து 05 வரை	30.00
02.	சதுர அடி 06 இருந்து 10 வரை	40.00
03.	சதுர அடி 11 இருந்து 15 வரை	50.00
04.	சதுர அடி 16 இருந்து 25 வரை	60.00
05.	சதுர அடி 26 இருந்து 50 வரை	70.00
06.	சதுர அடி 51 இருந்து 100 வரை	80.00
07.	சதுர அடி 101 இருந்து 150 வரை	90.00
08.	சதுர அடி 151 இருந்து 200 வரை	100.00
09.	சதுர அடி 201 இருந்து 300 வரை	200.00
10.	சதுர அடி 301 இருந்து 400 வரை	300.00
11.	சதுர அடி 401 இருந்து 500 வரை	400.00
12.	அதற்கு மேற்படுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும்	500.00
13.	ஐஸ்கிறீம் வாகனத்திற்காக	200.00
14.	ஐஸ்கிறீம் சைக்கிளுக்காக	100.00
15.	நடமாடும் வியாபார (கடலை, இனிப்பு பண்டம் பயிட்)	30.00
16.	தனியார் வாகனம் தரிப்பிடத்திற்காக	250.00
17.	மீதி வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பாதுகாக்கும் இடத்திற்கு	200.00

அக்மீமன பிரதேச சபை

கட்டிடம் நிர்மாணித்தல் கட்டண வரி அறவிடுதல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.9 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானம்

அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2020 ஆம் ஆண்டுக்காக கட்டுமிடம் நிர்மாணித்தலுக்காக பின்வருமாறு விதித்து அறவிடுவதற்கு உகந்தது என தீர்மானம் செய்யப்பட்டன.

கட்டிடங்களின் அளவுப்படி செலுத்துதல்	வதிவிடத்திற்காக	வியாபாரம் அல்லது வேறு செயல்களுக்காக
	ரூ. ச.	ரூ. ச.
சதுர மீற்றர் 45க்குக் குறைந்த (5சதுர அடி 500க்கு குறைந்த)	500 0	1,000 0
சதுர மீற்றர் 45-90 (501 - 1,000) அடி	1,500 0	2,000 0
	ரூ. ச.	ரூ. ச.
சதுர மீற்றர் 91-180 (1,001 - 2,000) அடி	2,500 0	3,000 0
சதுர மீற்றர் 181-270 (சதுர அடி 2,001 - 3,000) அடி	3,500 0	4,000 0
சதுர மீற்றர் 271-450 (சதுர அடி 3,001 - 5,000) அடி	4,500 0	6,000 0
சதுர மீற்றர் 451-675 (சதுர அடி 5,001 - 7,500) அடி	5,500 0	8,000 0
சதுர மீற்றர் 676-900 (சதுர அடி 7,501 - 10,000) அடி	6,500 0	10,000 0
சதுர மீற்றர் 901-1225 (சதுர அடி 9,693-13,179) அடி	7,500 0	12,000 0
சதுர மீற்றர் (1,226 இற்கு மேற்பட்டதன் பின்)	அனைத்து ச.மீ. 90க்குமாக 1,000 படி	அனைத்து ச.மீ. 90க்குமாக ரூ. 1250 படி

எல்லை சுவர் /பாதுகாப்பு சுவர் கட்டுதல்	இல்லம் நீள மீற்றர் 1 க்கு	வியாபாரம் நீள மீற்றர் 1 க்கு
	ரூ. ச.	ரூ. ச.
கட்டிட எல்லைக்கு அப்பால்	300 0	400 0
கட்டிட எல்லைக்குள்	500 0	600 0
கட்டிட விண்ணப்பப்பத்திர காலத்தை நீடிப்பதற்காக ஒரு வருடத்திற்கு	150 0	200 0

கட்டிடம் பயன்படுத்தல் சான்றிதழ் வழங்கும் போது பரிசோதனைக் கட்டணம்

வதிவிட கட்டுமானம்	ச.மீ. 300 க்கு குறைந்த ரூ. 3,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து ச.மீ. 1 க்கு ரூ. 10.00 படி
வியாபாரம் மற்றும் வேறு கட்டுமானம்	ச.மீ. 100 க்கு குறைந்த ரூ. 3,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து ச.மீ. 1 க்கு ரூ. 21.00 படி
எல்லை மதில்/பாதுகாப்பு மதில் கட்டுதல்	முதலாவது நீள மீற்றருக்கு 100 காக ரூபா 1,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து ச.மீ. 1 க்கு ரூ. 10.00 படி
காணி பிரித்தல்	முதலாவது காணி பகுதிக்கு ரூபா 1,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து காணித்துண்டுக்கும் ரூபா 500.00 படி
காணி வயல் காணி நிரப்புதல்	ச.மீ. 150 க்கு குறைந்த ரூ. 3,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து ச.மீ. 1 க்கு ரூ. 20.00 படி
தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு கோபுரம்	உயரம் மீற்றர் 5-20 வரை ரூபா 2,000.00 மற்றும் அதற்கு மேற்படும் அனைத்து 1 மீற்றருக்கும் ரூபா 100.00 படி
விசேட திட்டம்	சிறிய அளவுக்காக ரூபா 5,000.00 மத்திய அளவுக்காக ரூபா 10,000.00 பெரிய அளவுக்காக ரூபா 20,000.00
பயன்படுத்தல் சான்றிதழ் இன்றி குடியிருத்தல் பயன்படுத்தல், பிரயோசனத்துக்கு எடுத்தல்	ஒரு நாளைக்கு ரூபா 50.00 படி

முறையான அனுமதிப்பத்திரம் இன்றி செய்யப்படும் கட்டுமானம் மற்றும் பயன்படுத்தலை மாற்றம் செய்தல் தழுவும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அறவிடும் கட்டணம்

		வதிவிடம் ச. மீ. 1 க்காக செலுத்த வேண்டிய	வியாபாரம் மற்றும் வேறு கட்டணம் ச.மீ. 01 க்காக செலுத்த வேண்டிய கட்டணம்
01	அத்திவாரம் வேலை மாத்திரம் கயிறு சட்டபூரணம் செய்திருந்தால் (மட்டம்)	200 0	500 0
02	கூரை மட்டம் வரை (கூறை உடன்) கட்டி இருந்தால்	300 0	1,000 0
03	கூரையுடன் இருக்கும் போது	400 0	1,500 0
04	சம்பூர்ணமாக கட்டியிருந்தால்	500 0	2,000 0
05	எல்லை மதில் பாதுகாப்பு கட்டுமானம்	400 0	400 0

காணி துண்டுகளுக்கு பிரித்தலுக்கான கட்டணம்

காணித் துண்டு அளவு	ஒரு காணித்துண்டுக்கு அறவிட வேண்டிய தொகை (வீதி கான் மற்றும் பொது காணிப் பகுதி)
	ரூ. ச.
சதுர மீற்றர் 150 - 300 இடையில்	500 0
சதுர மீற்றர் 300 - 600 இடையில்	400 0
சதுர மீற்றர் 600 - 900 இடையில்	300 0
சதுர மீற்றர் 900 க்கு மேல்	200 0

தழுவும் அங்கீகாரத்திற்கான கட்டணம்
ஒரு நிலத் துண்டுக்கு 750 0 படி

வெளிநாட்டு ஒருவருடன் தொடர்பு கொண்டு தனியார் சங்கம் மூலம் செய்யப்படும் காணி கொள்வனவு செய்தல் மற்றும் காணி பிரித்தலுக்காக சபை தீர்மானப்படி கட்டணம் அறவிடப்படும்.

நீராடும் தடாகம் நடாத்திச் செல்வதற்காக ஆண்டுக்கு செலுத்த வேண்டிய வரித்தொகை சபைத் தீர்மானப்படி அறவிடப்படும்.

12-540/10

அக்மீமன பிரதேச சபை

வீதியை சேதப்படுத்தலுக்காக சேவைக் கட்டணம் அறவிடுதல் - 2020

அக்மீமன பிரதேச சபையில் 2019.10.15 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.1.11 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டன என பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சமரசேன கலெஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,
2019, நவெம்பர் 18.

தீர்மானம்

அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2020 ஆண்டுக்காக வீதியை சேதம் செய்தல் மற்றும் சேவைக்காக கட்டணம் அறவிட பின்வரும் உப அட்டவணையின் படி விதித்து அறவிடுவதற்கு உகந்தது என்று தீர்மானிக்கப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் சபை நீர்க்குழாய்கள் புதைத்தல்களுக்காக வீதி சேதம் செய்தலுக்காக கட்டணம் அறவிடல்

தொடர் இல.	வீதி விபரம்	தொகை
01.	காபட் செய்யப்பட்ட வீதி ச.மீ. 1 இற்கு	4,850 00
02.	தார் வீதி ச.மீ. 1 இற்கு	4,400 00
03.	கொன்கிறீட் போட்ட வீதி ச.மீ. 1 இற்கு	6,200 00
04.	வீதியின் ஓரத்திற்காக மண் வீதி ச.மீ. 1 இற்கு	600 00

யாதொரு நபரால் நீர் வழங்கல் பெற்றுக் கொள்ளும் போது சேதப்படுத்திய வீதியை மீண்டும் சரியான நிலைமைக்கு எடுப்பதற்கு உரிய நபரால் இணங்கி பாதை சேதப்படுத்தலுக்காக சபையால் அறவிடும் கட்டணத்திற்கு சமமான தொகையை சபையின் பிணைப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். உரிய நீர் வழங்கல் தொடர்பு பெற்றுக் கொண்டதன் பின் வீதியை சரியான நிலைமைக்கு ஏற்படுத்தியதன் பின் 25% சபையின் செலவு கட்டணமாக வைத்துக் கொண்டு மீதியை சபையின் அங்கீகாரத்தின் கீழ் வீடுவிக்க முடியும்.

சேவை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணம்	ரூபா சதம்
1. வீதி ரேகைகள் சுவீகரிக்கப்படாத சான்றிதழுக்கான கட்டணம்	500 0
2. கட்டிட விண்ணப்பப்பத்திரக் கட்டணம்	500 0
3. நீர்க்குழாய் விண்ணப்பப்பத்திரம்	250 0

சேவை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணம்	ரூபா சதம்
4. சூழல் விண்ணப்பப்பத்திரம்	250 0
5. சேவை வழங்குவதற்கான சான்றிதழ் (பதிவை உறுதிப்படுத்தல்/வேறு)	300 0
6. பிரித்தல் விண்ணப்பப்பத்திரம்	300 0
7. தேசியக் கட்டிட ஆராய்ச்சிக் கட்டணம்	25 0
8. நீருடன் பவுஸர் டெக்டர் வண்டியை வாடகைக்கு வழங்கல் (8 மணித்தியாலத்திற்கு)	350 0
9. நீருடன் பவுஸர் லொறி வண்டியை வாடகைக்கு வழங்கல் (8 மணித்தியாலத்திற்கு)	5,000 0
10. நீர் இன்றி டெக்டர் வண்டியை வாடகைக்கு வழங்கல் (8 மணித்தியாலத்திற்கு)	1,000 0
11. நீர் இன்றி நீர் டாங்கி - 1000L (8 மணித்தியாலத்திற்கு)	500 0
12. நீர் இன்றி நீர் டாங்கி - 1000L (12 மணித்தியாலத்திற்கு)	650 0
13. டெக்டர் வாடகைக்கு கொடுத்தல் (8 மணித்தியாலத்திற்கு)	3,000 0
14. வீதி செப்பமிடல் (நாளுக்கு)	3,000 0
15. உறுதிச் சுருக்க விண்ணப்பப்பத்திரக் கட்டணம்	400 0
16. சொத்து உரிமையை உறுதிப்படுத்தும் சான்றிதலுக்காக	400 0
17. கழிவகற்றல் பவுஸர் விண்ணப்பப்பத்திரக் கட்டணம்	100 0
18. பல செயல்களுக்காக கட்டிடத்தை வாடகைக்கு வழங்கல் (நாளுக்கு)	2,000 0
19. சமர்ஹட் வாடகைக்கு வழங்கல் (நாளுக்கு) மேற்படும் எல்லா நாட்களுக்கும் ரூபா 800 அறவிடப்படும்	800 0
20. ஒலிபெருக்கிக்காக (நாள் ஒன்றுக்கு)	4,000 0
21. ப்ரோஜேக்டர் வாடகைக்கு வழங்கல் (வைத்துக் கொள்ள வேண்டிய உச்சகால எல்லை 8 மணித்தியாலயம்)	4,000 0
22. நூல் நிலைய புத்தகம் தாமதம் தண்டனைப் பணம்	00
சிறுவர்	1
வயது வந்தோர்	2
23. பாலகர் பள்ளி பிள்ளைகள் பதிவு செய்யும் கட்டணம்	500.00

நீர் பவுஸர் வாடகைக்கு வழங்கும் இந்தக் கட்டணங்களுக்கு மேலதிகமாக போக்குவரத்துச் செலவு பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கி. மீ. க்கு ரூபா 100 படி மற்றும் அதிகாலை பிரதேசத்திற்குள் வெளியே கி. மீ. ரூபா 150 இன்படி அறவிடப்படும்.

இறுதிக் கிரியைகளுக்கான கட்டணம்

		ரூ. ச.
1.	அதிகாரப் பிரதேசத்திற்குள் வதிவாளரிடம் இறுதி கிரியைக்கு	5,000 0
2.	அதிகாரப் பிரதேசத்திற்குள் அப்பால் வதிவாளரிடம் இறுதி கிரிகைக்கு	7,000 0
	விசேட சந்தர்ப்பங்களில் கௌரவ தலைவரின் அனுமதியுடன் பி. ப. 6.30 ஒதுக்கல்	
1.	அதிகாரப் பிரதேசத்திற்குள் வதிவாளரிடம் இறுதி கிரிகைக்கு	5,500 0
2.	அதிகாரப் பிரதேசத்திற்குள் அப்பால் வதிவாளரிடம் இறுதி கிரிகைக்கு	7,500 0

(கேஸ் விலை மாற்றங்கள் ஏற்படும் போது சபையின் அங்கீகாரத்துடன் பிணம் எரிக்கும் கட்டணமாக அறவிடப்படும் தொகை மாற்றங்கள் ஏற்படக்கூடும்.)

சபையில் இருக்கும் அமைச்சர் குழு மற்றும் தாபனத்தின் சேவை செய்யும் அலுவலக குழுவின் ஒருவரின் மரணத்திற்கு அவர்களின் பெற்றோர் மற்றும் விவாகமாகாத சகோதரிகள் மரணத்தின் போது இறுதி கிரியைக்கு கட்டணம் 50% மாத்திரம் அறவிடப்படும்.

சுடுகாட்டு நிலம் சேவைக் கட்டணம்

சாதாரண அடக்கத்திற்கு

1.	அதிகாரப் பிரதேசத்திற்குள் வதிவாளரிடம் இறுதி கிரியைக்கு	1,500 0
2.	அதிகாரப் பிரதேசத்திற்கு அப்பால் வதிவாளரிடம் இறுதி கிரியைக்கு	2,000 0

அபாயகரமான மரம் அகற்றுவதற்கான சேவைக் கட்டணம்

*	பலா/தேங்காய், ஈரப்பலாக்காய் மரத்திற்காக	500 0
	மேற்படும் அனைத்து மரத்திற்கும்	500 0
	மற்றைய மரத்திற்காக	200 0
	மேற்படும் அனைத்து மரத்திற்கும்	100 0

* உல்லாச ஹோட்டல் மற்றும் தொழிற்சாலைகளில் கழிவு அகற்றும் போது சபையின் தீர்மானப்படி ஆண்டுக்கு வரித்தொகை அறவிடப்படும்.

இடைக்கால வாடகை கொடுத்தல் தொடர்பான விபரம்

கடை அறையொன்றை இடைக்கால குத்தகைக்காரர்களுக்கு கொடுக்கும் போது பெயர் மாற்றம் செய்யும் கட்டணமாக ரூபா 25,000 தொகையை அறவிடப்படும் தாற்காலிக தெரு, நடைபாதை, அல்லி வியாபாரத்திற்காக நில வரியாக நகர பிரதேசத்திற்குள் நாள் ஒன்றுக்கு சதுர அடிக்கு ரூபா 10 உம் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே சதுர அடிக்காக ரூபா 5 படி அறவிடப்படும்.

லொத்தர் குட்டிக்காக நில வரியாக ஆண்டுக்கு ரூபா 300 அறவிடப்படும்.

கழிவகற்றல் பவுஸர் சேவைக்கான கட்டணம்

தொடர்		சேவைப் பிரிவு	ரூபா ச. இல.
1.	வதியும் இடத்திற்கு லொட் 01 ற்காக		3,000 0
	அதற்கு மேற்படும் எல்லா ஒரு முறைக்காக லொட் 01 க்கு		3,000 0
2.	வியாபார நிலையத்திற்கு லொட் 01 இற்காக		4,000 0
	அதற்கு மேற்படும் எல்லா ஒரு முறைக்காக லொட் 01 க்கு		4,000 0
3.	தொழிற்சாலை நிலையத்திற்கு லொட் 01 ற்காக		4,500 0
	அதற்கு மேற்படும் எல்லா ஒரு முறைக்காக லொட் 01 க்கு		4,500 0
4.	உல்லாச ஹொட்டல்/தங்குமிடத்திற்கு லொட் 01 ற்காக		6,500 0
	அதற்கு மேற்படும் எல்லா ஒரு முறைக்காக லொட் 01 க்கு		6,500 0
5.	சமய நிலையத்திற்கு/அரச கல்வி தாபனம் லொட் 01 ற்காக		1000 0
	அதற்கு மேற்படும் எல்லா ஒரு முறைக்காக லொட் 01 க்கு		1,000 0

* பிரதேச சபை எல்லைக்கு அப்பால் மேற் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு இடத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தில் இரு மடங்காகும்.
* இந்த கட்டணங்களுக்கு மேலதிகமாக போக்குவரத்து செலவு பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் வதிவிடத்திற்காக ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 150 படி மற்றும் அவ்வாறு இல்லாத அனைத்து இடங்களுக்கும் கிலோ மீற்றருக்கு ரூபா 200 படி அறவிடப்படும்
* கழிவகற்றல் சேவை வழங்குவதற்காக சோதனைக் கட்டணம் ரூபா 100 அறவிடப்படும்.
* கழிவை கொண்டு சென்று அகற்றுவதற்காக லொட் 01 இற்கு ரூபா 1,000 அறவிடப்படும்.

* கழிவைக் கொண்டு சென்று தனியார் இடத்தில் அகற்றும் போது உரிய இடத்திற்கு உரிய தாபனத்தில் அறவிடும் கட்டணம் செலுத்தி சபை அறியப்படுத்தியதன் பின் கழிவகற்றல் பவுசஸரின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். (உரிய நீதிகள் படி).

நிபந்தனை

* சமய நிலையங்கள் மற்றும் அரச கல்வித் தாபனங்களுக்கு பெற்றுக் கொடுக்கும்போது மற்றும் யாதொரு நபரின் பொருளாதாரத்தைக் கொண்டு 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கட்டணங்களில் இருந்து விடுவிக்க அல்லது நிவாரணம் அடிப்படையில் 50% அறவிடுவதற்கு அதிகாரம் உண்டு.

* கழிவு பவுஸர் எங்கள் தாபனத்திற்கு பெற்றுத் தந்த ஹரிதகம கிராமவாசிகளுக்கு இந்த சேவையை கட்டணங்களில் விடுவிக்க அல்லது நிவாரணம் அடிப்படையில் 50% அறவிடுவதற்கு தலைவரின் அங்கீகாரப்படி நடைபெறும்.

12 - 540/11

பிட்டபெத்தர பிரதேச சபை

வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் - 2020

பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 3 III (I) இன் கீழ் கீழே குறிப்பிடப்படும் தீர்மானம் சபை அங்கீகாரம் பெற்றது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

அதன் பிரகாரம் ஏதேனும் துணைவிதியொன்றின் கீழ் பிட்டபெத்தர பிரதேச சபை அதிகார எல்லைக்குள், ஏதேனும் தொழிலொன்றை நடாத்திச் செல்வதற்காக 2020 ஆம் வருடத்தில் பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் வழங்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்கள் மீதும் கட்டணமொன்று அறவிடப்படுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஆர். சிறிவர்தன,
தவிசாளர்,
பிட்டபெத்தர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிட்டபெத்தர,
2019, ஒற்றோபர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149, ஆம் இலக்க பிரிவுடன் மொழியப்படுகின்ற அந்தச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் (ஆ) பந்தியின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிரதேச சபை சட்டத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதியின் 520/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட துணை விதி 2007.12.28 ஆந் திகதியின் 1530 ஆம் இலக்க வர்த்தமானியின் அறிவித்தலின் பிரகாரம் பிட்டபெத்தர பிரதேச சபை ஏற்றுக்கொண்டதுடன், அதன்படி அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள கீழே 1 ஆம் நிரலில் பிரசுரிக்கப்பட்ட சுற்றாடலொன்று இடமொன்று தொடர்பாக 2 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட அளவுகளிலான அனுமதிப்பத்திரக் கட்டணமொன்று, 2020 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்து அறவீடு செய்யவும், 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற ஹோட்டலொன்று, சிற்றுண்டிச்சாலையொன்று, தங்கு விடுதியொன்று என்பவற்றிற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதில் குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய வருட வருவாயின் 1% ஐ அனுமதிப்பத்திரக் கட்டணமாண 2020 ஆம் வருடத்திற்கு

நிர்ணயம் செய்து அறவீடு செய்யவும் கீழ் குறிப்பிடப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் குறிப்பிட்ட நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இவ்வனுமதிப்பத்திரக் கட்டணமானது 2020, ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் சபைக்குச் செலுத்தப்பட வேண்டுமெனவும் பிட்டபெத்தர பிரதேச சபை தீர்மானம் செய்தது.

அட்டவணை 1

1987 ஆம் ஆண்டி ன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 140 ஆம் பிரிவின் கீழ் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

நிரல் I	நிரல் II		
வியாபாரத்தின் தன்மை	சுற்றாடலின் வருடாந்தப் பெறுமதி		
	750 ரூபாவுக்குக் குறைய ரூபா ச.	750 ரூபா முதல் 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச.
1 வெதுப்பகமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
2 சோற்றுக் கடை, அல்லது உணவகமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
3 தேநீர்/கோப்பி கடை ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
4 தங்கும் விடுதி ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
5 நாவிதன் கடையொன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
6 இறைச்சிக் கடை	500.00	750.00	1000.00
7 மீன்கடை	500.00	750.00	1000.00
8 சலவைக் கடை	500.00	750.00	1000.00
9 நடமாடும் வியாபாரம் (அன்றாடம் உணவுக்காக எடுக்கப்படும் உணவு வகைகளை வாகனங்கள் மூலம் கொண்டு வியாபாரம் செய்தல்)	300.00	450.00	600.00
10 குளிர்பான தொழிற்சாலை	500.00	750.00	1000.00
11 பால் விற்பனை	500.00	750.00	1000.00
12 ஹோட்டல்	500.00	750.00	1000.00
13 மாடறுப்பகம் ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
14 மாட்டுத் தொழுவமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00

12-542/1

பிட்டபெத்தர பிரதேச சபை

தொழில் வரி அறவீடு செய்தல் - 2020

பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 9 III (2) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் தீர்மானம் சபை அங்கீகாரம் பெற்றது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

2020 ஆம் ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட அந்த தொழில் வரியை அதே வருடம் ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிட்டபெத்தர பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஆர். சிறிவர்தன,
தவிசாளர்,
பிட்டபெத்தர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிட்டபெத்தர,
2019, ஒற்றோபர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150, ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிட்டபெத்தர பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற இங்கு கீழே அட்டவணையில் 1ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தொழில் தொடர்பாக அட்டவணையில் II ஆம் நிரலில் ஒவ்வொரு தொழிலைக் கொண்டு நடாத்தும் சுற்றாடலின் வருடாந்த பெறுமதிக்கேற்ப முறையே குறிப்பிடப்பட்ட அளவுகளிலான தொழில் வரியொன்றினை 2020 ஆம் வருடத்திற்கு நிர்ணயம் செய்து அறவீடு செய்ய வேண்டுமெனவும் மேற்குறிப்பிட்ட தொழில் வரிக்குரித்தான நபரொருவர் அந்தத் தொழில் வரியை 2020 ஆம் வருடம் ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிட்டபெத்தர பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும் தீர்மானம் செய்தது.

அட்டவணை

	நிரல் I	நிரல் II		
தொ. இல.	வியாபாரத்தின் தன்மை	வருடாந்தப் பெறுமதி ரூபா 750 வரை	வருடாந்தப் பெறுமதி ரூபா 750 முதல் ரூபா 1,500 வரை	வருடாநாந்தப் பெறுமதி ரூபா 1,500 இற்கு மேல்
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
01	ஆடைகள் தைக்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
02	ஆடைத் தொழிற்சாலை ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
03	தேயிலைத் தூள், மசாலாச் சாமான் பெக்கட் விற்பனை செய்தல்	300.00	350.00	500.00
04	மிதிவண்டி பழுது பார்த்தல்	300.00	400.00	500.00
05	நெல் குத்தும் ஆலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
06	மோட்டார் பைசிக்கிள், முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல்	500.00	750.00	1000.00
07	சீமெந்துக்கல் உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
08	டயர், டியூப் பழுதுபார்த்தல்	500.00	750.00	1000.00
09	மின் உபகரணங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
10	தேங்காய் எண்ணெய் ஆலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
11	வானொலி, தொலைக்காட்சி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
12	உலோகப் பட்டறைமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
13	எண்மானத் தொழில் நுட்பம் மூலம் அச்சகமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
14	தச்சுக் கொட்டகையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
15	குஷன் வேலை நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
16	கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
17	பலகையில் சித்திரவேலைப்பாடுகள் செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
18	சுண்ணாம்புச் எரிக்கும், விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	300.00	600.00	750.00
19	கொப்பரா உற்பத்தி செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	300.00	400.00	600.00
20	இறப்பர் தொழிற்சாலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
21	வாயு சீரமைப்பிகள், குளிரூட்டிகள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
22	விளக்குமாறு, கால்துடைப்பான், தும்பினாலான உற்பத்திகள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	300.00	450.00	600.00
23	மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
23	மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

		நிரல் I	நிரல் II	
தொ. இல.	வியாபாரத்தின் தன்மை	வருடாந்தப் பெறுமதி ரூபா 750 வரை	வருடாந்தப் பெறுமதி ரூபா 750 முதல் ரூபா 1,500 வரை	வருடாநாந்தப் பெறுமதி ரூபா 1,500 இற்கு மேல்
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
24	தங்கம், வெள்ளி முலாமிடும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
25	மாணிக்கக்கல் வெட்டுதலும், பட்டை தீட்டுதல் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
26	பிளாஸ்டிக் கண்ணாடி, நாரிழை உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
27	மர ஆலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
28.	கபொக், பரள், கருங்கல் தோண்டும் இடமொன்றை கொண்டு நடாத்துதல் (கற்குழியொன்றை நடாத்துதல்)			
29.	கம்மாலை ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
30.	கருங்கற்களை வெடிக்க வைக்கும் இடமொன்றை கொண்டு நடாத்துதல்	500.00	750.00	1000.00
31.	இயந்திரங்கள் மூலம் கருங்கல்லுடைக்கும் (க்ரஷர்) இடமொன்றை கொண்டு நடாத்துதல்	500.00	750.00	1000.00
32.	கோழிப் பண்ணையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
33.	அமில வாயுக்களைப் பயன்படுத்தி இரும்பு (ஒட்சிசன்) கம்மாலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
34.	விவசாய இரசாயனப் பொருட்களை விற்பனை செய்தல் களஞ்சியப்படுத்தல்	500.00	750.00	1000.00
35.	பழைய உலோகங்களை களஞ்சியப்படுத்தல் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
36.	அமிலங்களை உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும்	500.00	750.00	1000.00
37.	தெளிப்பு ஓவிய (ஸ்பிறே பெய்ன்ட்) நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
38.	வாணவெடி, பட்டாசுகள் உற்பத்தியும் களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
39.	எரிவாயு களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
40.	வாகனங்கள் புத்தாக்க சேவை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
41.	வேல்டிங் வேலைத்தளமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
42.	தனியார் நீர்மின் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00

12-542/2

பிட்டபெத்தர பிரதேச சபை

வர்த்தக வரி அறவிடல் - 2020

பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 3 III (3) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் தீர்மானம் சபை அங்கீகாரம் பெற்றது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

2020 ஆம் ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட அந்த வர்த்தக வரியை அதே வருடம் ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிட்டபெத்தர பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஆர். சிறிவர்தன,
தவிசாளர்,
பிட்டபெத்தர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிட்டபெத்தர,
2019, ஒற்றோபர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் விதிமுறைகளுக்கு அமைவாக அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வர்த்தக வரியொன்றை செலுத்தத் தேவையற்ற கீழே முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஏதேனும் வர்த்தகமொன்றை பிட்டபெத்தர பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2020 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் அனைவரிடமும் அந்த வர்த்தகத்தின் அதற்கு முன்னைய வருட வருவாய் முதலாம் அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயதானம் தொடர்பான எல்லைக்குள் அமையும் போது அதன் II ஆம் நிரலில் முறையே குறிப்பிடப்பட்ட அளவுகளிலான வர்த்தக வரியொன்றை 2020 ஆம் வருடத்திற்கு நிர்ணயம் செய்து அறவீடு செய்யவும், வரிக்குரித்தான ஏதேனும் ஒருவர் அந்த வர்த்தக வரியை 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிட்டபெத்தர பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் பிட்டபெத்தர பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அட்டவணை 01

I ஆம் நிரல்	II ஆம் நிரல்
வரி அறவிடப்படுகின்ற வருடத்திற்கு முன்னைய வருட வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட வருவாய்	செலுத்த வேண்டிய வரி ரூபா சதம்
01 ரூ. 6000 க்கும் குறைவான சந்தர்ப்பத்தில்	வரி இல்லை
02 ரூ. 6000 முதல் ரூபா 12000 வரை	ரூ. 90.00
03 ரூ. 12000 முதல் ரூபா 18750 வரை	ரூ. 180.00
04 ரூ. 18750 முதல் ரூபா 75000 வரை	ரூ. 360.00
05 ரூ. 75000 முதல் ரூபா 150000 வரை	ரூ. 1200.00
06 ரூ. 150000 க்கு அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில்	ரூ. 3000.00

அட்டவணை 2

1	தைத்த ஆடைகள், புடவைகள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
2	சாப்புச் சாமான்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
3	பாதணி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
4	செய்தி பரிமாற்று நிலையமொன்றை நடாத்துதல்
5	புகைப்பட சாலையொன்றை நடாத்துதல்
6	வர்ண இரசாயன ஆய்வுகூடமொன்றை நடாத்துதல்
7	ஏற்றுமதிக்கான தேயிலை தயாரிக்கும் நிலையமொன்றை நடாத்துதல்
8	தேயிலைத் தளிர் சேகரிக்கும் நிலையமொன்றை நடாத்துதல்
9	கட்டிடப்பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
10	உடற்பயிற்சி நிலையமொன்றை நடாத்துதல்
11	பூச்சுக்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்

12 இரும்புச் சாமான்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
13 தனியார் கல்வி நிலையமொன்றை நடாத்துதல்
14 பாலர் பாடசாலை, நாள் பராமரிப்பு நிலையமொன்றை நடாத்துதல்
15 கணினி மென்பொருட்கள் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்துதல்
16 கணினி பயிற்சி பாடத்திட்டங்கள் நடாத்தும் நிலையமொன்றை நடாத்துதல்
17 சாரதிப் பயிற்சி வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
18 நாற்றுமேடையொன்றினை நடாத்துதல்
19 ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
20 ஆங்கில மருந்து விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
21 தொலைபேசி சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
22 மேற்கத்திய வைத்திய நிலையமொன்றை நடாத்துதல்
23 வைத்திய இரசாயன ஆய்வு கூடமொன்றை நடாத்துதல்
24 மிருக பராமரிப்பு நிலையமொன்றை நடாத்துதல்
25 கணக்காய்வு அல்லது கணக்காளர் சேவை நிலையமொன்றை நடாத்துதல்
26 வங்கியொன்றை நடாத்துதல்
27 காப்புறுதிச் சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
28 குத்தகை சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
29 நில அளவையாளர் சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
30 வீட்டு நிர்மாண சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
31 வார்ப்பு, விஞ்ஞான சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
32 பொறியியலாளர் சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
33 வைத்திய நிபுணத்துவர் சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
34 தனியார் வைத்தியசாலை ஒன்றை நடாத்துதல்
35 ஆடைத்தொழிற்சாலை ஒன்றை நடாத்துதல்
36 தங்க நகைகள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
37 கணினி உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
38 மரத்தளபாடங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
39 விளம்பரங்கள் செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
40 உற்சவப்பொருட்களை வாடகைக்கு வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
41 மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
42 அதிர்ஷ்ட சீட்டு முகவர் நிலையமொன்றை நடாத்துதல்
43 பீங்கான் களியிலான உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
44 குதிரைப் பந்தய நிலையமொன்றை நடாத்துதல்
45 முகவர் தபால் நிலையமொன்றை நடாத்துதல்
46 படங்கள் சட்டமிடும், கண்ணாடி வெட்டும் நிலையமொன்றை நடாத்துதல்
47 இறப்பர், கறுவா கொள்வனவு செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
48 தொலைபேசி சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
49 கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
50 தொழில் முகவர் நிலையமொன்றை நடாத்துதல்
51 அடகுப்பொருட்கள் பெறும் நிலையமொன்றை நடாத்துதல்
52 வீடியோ நாடாக்கள், இறுவட்டுகள் விற்பனை செய்தல் வாடகைக்கு வழங்குதல்
53 எழுது கருவிகள், புத்தகக் கடையொன்றை நடாத்துதல்
54 பலகை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
55 சில்லறை வியாபார நிலையமொன்றை நடாத்துதல்
56 இசைக் கருவிகள் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
57 களஞ்சியமாக பயன்படுத்தப்படுகின்ற நிலையமொன்றை நடாத்துதல்
58 மொத்தமாக பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
59 மின் உபகரணங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
60 பிரபலமான நிறுவனங்களின் பண்டங்களை விநியோகிக்கும் முகவர் நிலையமொன்றை நடாத்துதல்
61 பிரபலமான நிறுவனங்களின் பண்டங்களை காட்சிப்படுத்தும், விற்பனை செய்யும் முகவர் நிலையமொன்றை நடாத்துதல்

62 வாகனங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
63 வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
64 மோட்டார் சைக்கிள்/முச்சக்கர வண்டிகள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
65 மிதி வண்டி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
66 ஆயுர்வேத வைத்திய நிலையமொன்றை நடாத்துதல்
67 மோட்டார் சைக்கிள்/முச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
68 எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல்
69 சாராயம், பியர் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
70 சினிமா கொட்டகை ஒன்றினை நடாத்துதல்
71 அழகியல் ஒப்பனை நிலையமொன்றை நடாத்துதல்
72 மாணிக்கக்கல் கொள்வனவு, மாணிக்ககல் வெட்டும் நிலையமொன்றை நடாத்துதல்
73 வெளிநாட்டு தொழில் முகவர் நிலையமொன்றை நடாத்துதல்
74 சுவிசேஷ வியாபார நிலையமொன்றை நடாத்துதல்
75 தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டைகள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
76 தேயிலைத் தொழிற்சாலை ஒன்றினை நடாத்துதல்
77 இணையத்தள சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
78 அலங்கார மீன் வகை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
79 மசாலா பொருட்கள், அரிசி, சீனி, பால்மா சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
80 யோகட் உற்பத்தியும், விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
81 பசளை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
82 மரணச்சடங்கு சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்
83 இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
84 பற்சிகிச்சை நிலையமொன்றை நடாத்துதல்
85 மின்கலங்களை மீள் வலுவூட்டல் செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
86 அச்சகமொன்றை நடாத்துதல்
87 உற்பத்தி செய்யப்பட்ட பொலித்தீன் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
88 சமிக்ஞை கோபுரத்திற்கு
89 வெற்றிலை வியாபாரம்
90 டயர் டியூப் விற்பனை
91 சிறிய ஏற்றுமதிப் பொருட்கள் விற்பனை
92 பாடசாலை உபகரண விற்பனை
93 கொங்கிறீட் வேலைத்தளமொன்றை நடாத்துதல்
94 விவசாய இரசாயனத் திரவியங்கள் உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும் நிலையமொன்றை நடாத்துதல்
95 பழைய உலோகங்கள் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றை நடாத்துதல்

12-542/3

பிட்டபெத்தர பிரதேச சபை

விளம்பரங்கள் கட்புலனாகும் சுற்றாடல் - 2020

பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 3 III (4) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் தீர்மானம் சபை அங்கீகாரம் பெற்றது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

எம். ஆர். சிறிவர்தன,
தவிசாளர்,
பிட்டபெத்தர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிட்டபெத்தர,
2019, ஒற்றோபர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122- 126 ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க தென் மாகாண அதிவிசேட வர்த்தமானியில் iv (அ) பகுதியில் கௌரவ அமைச்சரினால் அறிவிக்கப்பட்டதுமான 2017.12.28 ஆந் திகதியின் 1530 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிட்டபெத்தர பிரதேச சபை மூலம் பிரேரணையாக ஏற்கப்பட்டு அங்கீகாரம் பெற்றதுமான துணை விதிக்கோவையின் 39 ஆம் பந்தியின் கீழ் பிட்டபெத்தர பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல் (பதாகை உட்பட) நிர்மாணிப்பு, காட்சிப்படுத்தலுக்குமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணம் 2020 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதி முதல் நிர்ணயம் செய்யப்பட்டு அறவீடு செய்ய தீர்மானம் செய்தது.

அட்டவணை 1

	விளம்பர அறிவித்தல்கள்	அறிவித்தல் பலகை	பதாகைகள், உருவப்படங்கள்	
		ஒரு வருடத்திற்கு (சதுர அடிக்கு)	ஒரு மாதத்திற்கு (சதுர அடிக்கு)	ஒரு மாதத்திற்கு மேல் (சதுர அடிக்கு)
1	தனியார் சுற்றாடலில் நிர்மாணிக்கப்பட்ட அல்லது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்கள்	ரூபா 75.00	ரூபா. 25.00	ரூபா. 40.00 பட்ட
2	பிரதான பாதைக்கு தெரியும் விதத்தில் போதிய இடப்பரப்பில் அமைக்கப்படும் பிரதான பாதைக்கு அணித்தாக நிர்மாணிக்கப்பட்ட அல்லது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்கள்	ரூபா 75.00	ரூபா. 25.00	ரூபா. 40.00
3	உள்ளூராட்சி நிறுவன சுற்றாடலைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட அறிவித்தல்கள்	ரூபா 90.00	ரூபா. 25.00	ரூபா. 40.00

12- 542/4

பிட்டபெத்தர பிரதேச சபை

கழிவகற்றல் கட்டணம் அறவீடு செய்தல் - 2020

